சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 09.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **82/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | ராஜராஜன் |
| தந்தை பெயர் | : | கண்ணதாசன் |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை |
| வயது | : | 25 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

6 ம் எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன்

சமூகத்தை சேர்ந்தவர் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பிற்படுத்தப்பட்ட இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவ்வழக்கில் குற்ற சம்பவம் பற்றி புகார் அளித்துள்ள சாட்சி மோகன் என்பவர் எனது பெரியப்பா ஆவார். அவரது மனைவி அ.சா-3 கவிதா, அவரது மகன் பாலாஜி ஆகியோர்களை தெரியும். கடந்த 31.12.2016 ஆம் தேதி அன்று இரவு அந்த ஆண்டு முடிவடைந்தவுடன் நடு இரவில் 01.01.2017 ஆம் தேதி புதிய ஆண்டு பிறப்பதால் தெருவில் புத்தாண்டை கொண்டாடுவதற்காக சாலையில் புத்தாண்டை வரவேற்று அதை எழுதுவதற்காக நாங்கள் சென்றபோது இருட்டு நேரமாக இருந்தால் ரோட்டில் வந்தவர்கள் சத்தம் போட்டார்கள். இதில் தள்ளு முள்ளு ஏற்பட்டது. எனக்கு நெற்றியிலும், இடது கை மணிக்கட்டிலும் காயம் ஏற்பட்டது. அனைவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். அங்கு போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். நடந்த விபரம் சொன்னோம். எழுதிக்கொண்டார்கள். அதன் பின்னர் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

மேற்படி சம்பவ தேதி, சம்பவ இடத்தில் இவ்வழக்கில் ஆஜராகியுள்ள எதிரிகள் தான் என்னை சாதி பெயரை சொல்லி திட்டினார்கள் என்றும், எதிரிகள் கல்லால் தாக்கியதில் மற்ற சாட்சிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கண்டவாறு போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்ட காரணத்தினால்

உண்மையை மறைத்து இந்த எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.09 18:06:48 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.